DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 185/2016
Miscellaneous :
Sessions : PW 4
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | குமரேசன் |
| Father / Husband Name | காந்தி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **10.02.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஓங்கூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ராமசாமியை தெரியும். 12.11.2015 ம் தேதி நான் சென்னையில் இருந்தபோது எனது மாமா ராமசாமி என்பவர் அவரது மாமியார் வீட்டிற்கு சென்று வரும் போது ஆத்தூர் டோல்கேட் அருகே விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்போது அவர் இறந்திருந்தார். அவரின் பிரேதத்தின் மீது போலிசார் நடத்திய பிரேத விசாரணையில் நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**2.** கடந்த 12.11.2015 ம் தேதி இரவு 8.00 மணிக்கு நான் சென்னை செல்வதற்காக ஆத்தூர் டோல்பிளாசா அருகே நின்றுகொண்டிருந்தேனா என்றால் இல்லை. எனது மாமா ராமசாமி அவரது மாமியார் வீட்டிற்கு சென்றுவிட்டு ஆத்தூர் டோல்பிளாசா சாலையை கடக்கும் போது திண்டிவனத்தில் இ ருந்து சென்னை நோக்கி வந்த TN 07 AR 3562 என்ற இனோவா காரை ஆஜர் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து எனது மாமா மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்ததகா போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை முன்னிலையாக ஆகாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.